**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி**

**அ.வ.எண்.8/2025**

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2025 ஆண்டு நவம்பர் மாதம் 07 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ஹரிஹரன் | மதம் | : இந்து |
| த/பெ | : ஆதிமூலம் | ஜாதி | : -- |
| வயது | : 30 | கிராமம் | : திருத்தணி |
| தொழில் | : வங்கி மேலாளர் | வட்டம் | : திருத்தணி |

**07.11.2025**
**வா.சா. 1 ன் முதல் விசாரணை**

1. நான் இவ்வழக்கில் வாதி வங்கியில் கிளை மேலாளர் ஆவேன். வாதி தரப்பு 1ம் சாட்சியாக சாட்சியம் அளிக்கிறேன். என் தரப்பில் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். எனது பிரமாண வாக்குமூலத்தை நான் சொல்லித்தான் என்னுடைய வழக்கறிஞர் தயார் செய்தார். அதில் உள்ள விவரங்கள் எனக்கு நன்கு தெரியும். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். 24.12.2019ம் தேதியிட்டு பிரதிவாதிகள் கொடுத்த கடன் விண்ணப்பம் அசல் தாக்கல் செய்கிறேன். **(கடன் விண்ணப்பம் வா.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** 02.01.2020ம் தேதியிட்டு வாதி வங்கிக்கு பிரதிவாதிகள் அளித்த கடன் ஒப்பந்தம் அசல் தாக்கல் செய்கிறேன். **(கடன் ஒப்பந்தம் வா.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

2. 19.07.2024ம் தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு தாக்கல் செய்கிறேன். **(வழக்கறிஞர் அறிவிப்பு வா.சா.ஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** வங்கி கணக்கு பட்டியல் தாக்கல் செய்கிறேன். **(வங்கி கணக்கு பட்டியல் வா.சா.ஆ 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** அஞ்சல் ஒப்புதல் அட்டை தாக்கல் செய்கிறேன். **(அஞ்சல் ஒப்புதல் அட்டை வா.சா.ஆ 5 ஆக**

**குறியீடு செய்யப்படுகிறது)** வழக்கு தாக்கல் செய்ய எனக்கு கொடுக்கப்பட்ட அதிகாரம் உண்மை நகல் தாக்கல் செய்கிறேன். **(அதிகாரம் வா.சா.ஆ 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** பிராதுப்படி தீர்ப்பு செய்ய வேண்டுமாய் பிரார்த்திக்கிறேன்.